**வருகின்ற 2018-ம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. இந்நகராட்சிக்கு Capital Grant and Operation & Maintenance Gap Filling Fund 2018-19-ன் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு (water supply improvement ) ரூ.150.00 இலட்சமும், மழைநீர் வடிகால் பணிகளுக்கு ( Storm water drain ) ரூ. 100.00 இலட்சமும் , மொத்தம் ரூ. 250.00 இலட்சத்தில் 90% ( 225.00 இலட்சம்) முழு மானியமாகவும் 10% (25.00 இலட்சம்) பொது நிதியில் மேற்கொள்ளவும் பணி ஒதுக்கீடு செய்து 18.04.2018 அன்று நடைபெற்ற அதிகார குழுவில் (Empowered committee) தீர்மானிக்கப்பட்டு கூட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன்படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 120, 28.05.2018 அன்று ஒப்புதல் வழங்கியதன் பேரில் விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை நடவடிக்கைகள் ந.க.எண். 15040/2017/இ1, நாள்: 21.06.2018-ல் கீழ்கண்ட குடிநீர் மேம்பாடு பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி கடிதம் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீட்டுத் தொகை.ரூ. (இலட்சத்தில் ) |
|---|---|---|
| | **I.குடிநீர் மேம்பாட்டு பணிகள்** | |
| 1 | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல் | 50.00 |
| 2 | பழைய குடிநீர் இணைப்புகளில் ப்ளோ கண்ட்ரோல் வால்வு பொருத்துதல் | 50.00 |
| 3 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் புரணமைப்பு செய்தல் | 40.00 |
| 4 | தலைமை நீரேற்று நிலையத்தில் சுற்று சுவர் கட்டுதல் | 10.00 |
| | மொத்தம் | 150.00 |

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.
2. மொத்த மதீப்பிட்டுத் தொகை ரூ.150.00 இலட்சத்தில் மானிய நிதி ரூ. 135.00 இலட்சம் போக மீதித் தொகை ரூ. 15.00 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.840/2018/இ1)

2. இந்நகராட்சிக்கு Capital Grant and Operation & Maintenance Gap Filling Fund 2018-19-ன் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு (water supply improvement ) ரூ.150.00 இலட்சமும், மழைநீர் வடிகால் பணிகளுக்கு ( Storm water drain ) ரூ. 100.00 இலட்சமும் , மொத்தம் ரூ. 250.00 இலட்சத்தில் 90% ( 225.00 இலட்சம்) முழு மானியமாகவும் 10% (25.00 இலட்சம்) பொது நிதியில் மேற்கொள்ளவும் பணி ஒதுக்கீடு செய்து 18.04.2018 அன்று நடைபெற்ற அதிகார குழுவில் (Empowered committee) தீர்மானிக்கப்பட்டு கூட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன்படி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 120, 28.05.2018 அன்று ஒப்புதல் வழங்கியதன் பேரில் விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை நடவடிக்கைகள் ந.க.எண். 15040/2017/இ1, நாள்: 21.06.2018-ல் கீழ்கண்ட மழைநீர் வடிகால் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி கடிதம் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீட்டுத் தொகை.ரூ. (இலட்சத்தில் ) |
|---|---|---|
| | **I மழைநீர் வடிகால் கட்டும் பணி** | |
| 1 | சிப்பம் -I, வார்டு எண். 2,4,5, மற்றும் 8 கோர்ட் அருகில் உள்ள சாலை, மேட்டூர் மெயின்ரோடு, கவுண்டர் நகர், குருநாதன் தெரு, அந்தியூர் ரோடு, ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டும் பணி | 50.00 |
| 2 | சிப்பம் -II வார்டு எண். 8,21, மற்றும் 26 அந்தியூர் ரோடு பூக்கடை வீதி பழணியாண்டவர் கோவில் தெரு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டும் பணி | 50.00 |
| | மொத்தம் | 100.00 |

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.
2. மொத்த மதீப்பிட்டுத் தொகை ரூ.100.00 இலட்சத்தில் மானிய நிதி ரூ. 90.00 இலட்சம் போக மீதித் தொகை ரூ. 10.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.840/2018/இ1)

3. பவானி நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட்டில் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள மூன்று Shed களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க ரூ.60,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 01138/2018/இ1)

4. பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள 15KVA ஜெனரேட்டர் பழுதுபட்டுள்ளதால் அலுவலகத்தில் கணிணி பணிகள் மற்றும் அனைத்து மின்சாதனங்கள் எரியாததால் அலுவலக பணிகள் அனைத்தும் செய்ய சிரமமாக உள்ளது. எனவே இதனை பழுது பார்க்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.27000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

5. பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 14 தேவராஜன் பிள்ளைசந்து மற்றும் சிவஞானம் சந்து ஆகிய பகுதிகளில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை அகற்றி புதியதாக மழைநீர் வடிகால் கட்ட ரூ. 4,80,000/- செலவாகும் என மதிப்பிடபட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்./01140/2018/இ1)

6 பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.20, ஜோதி விநாயகர் கோவில் வீதியில் பழுதான கான்கீரிட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டவும், பழனியாண்டவர் கோவில் வீதியில் இருந்து ஜோதி விநாயகர் கோவில் வீதி நுழைவு பகுதி முஸ்லிம் குடியிருப்பு பகுதி, சீனிவாசபுரம் 2வது வீதி, அனுசயா பிரசவ விடுதி ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் ஆகியவற்றை புதியதாக கட்ட ரூ.3,60,000/- செலவாகும் என மதிப்பிடபட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.01141/2018/இ1)

7. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டூர் மெயின்ரோடு காமராஜ் நகர் விவசாய கூட்டுறவு சங்கம் முதல் அந்தியூர் பிரிவு பவானி வரை குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 139 நாள்: 28.05.2018 ஒப்புதல் வழங்கியதன் பேரில் 29.06.2018-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டின் விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. எம். அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.5% அதிகம் |
| 2 | திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு |

மன்றம் அனுமதிக்கலாம்

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.05%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு. **S.பாலசுப்ரமணியன்**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

(ந.க.எண். 938/2018/இ1)

8. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுர் மெயின்ரோடு அந்தியூர் பிரிவு முதல் PWD அலுவலகம் வரை குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்:**139** , நாள்: 28.05.2018-ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 29.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **மதிப்பீட்டின் விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.M.அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.05 % குறைவு |
| 2 | திரு.S.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.62% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.05%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**M.அப்புசாமி**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 938/2018/இ1)

9. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டூர் மெயின்ரோடு (காமராஜ் நகர் விவசாய கூட்டுறவு சங்கம் முதல் PWD அலுவலகம் வரை) ஏற்கனவே உள்ள வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளை புதிய பகிர்மான குழாய்க்கு மாற்றுதல் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகளை தற்காலிக பழுது பார்த்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **139,** நாள்:28.05.2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 29.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **மதிப்பீட்டின் விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.M.அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.04 % குறைவு |
| 2 | திரு.S.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 10,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.78% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.04%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**M.அப்புசாமி**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

(ந.க.எண். 938/2018/இ1)

10. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த கழிப்பிடங்களை மராமத்து பணிகள் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்: **144 ,** நாள்: 28.05.2018-ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 29.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **மதிப்பீட்டின் விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 3,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.67% குறைவு |
| 2 | திரு.P.A.செல்லப்பன், ஒப்பந்ததாரர் | 3,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 1.27 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட**0.67%**சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**S.பாலசுப்ரமணியன்**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 938/2018/இ1)

11. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட உரக்கிடங்கில் குப்பை லாரி உட்பகுதியில் சென்று குப்பை கொட்டும் வகையில் இயந்திரம் மூலம் குப்பையை ஒதுக்கி மண் கொட்டி சமபடுத்தி பாதை அமைக்கும் பணி, பணியாளர் தங்கும் அறை மராமத்து பணி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **146,** நாள்: 28.05.2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 29.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **மதிப்பீட்டின் விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.M.அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 2,50,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.61 % குறைவு |
| 2 | M/s. R.N & Co. ஒப்பந்ததாரர் | 2,50,000 | மதிப்பீட்டுவிலை விகிதத்தைவிட 1.37% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.61%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**M.அப்புசாமி**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 938/2018/இ1)

12. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 அந்தியூர் மெயின் சாலையில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்: **45** , நாள்:28.02.2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 06.07.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **மதிப்பீட்டின் விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 2,70,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.18% குறைவு |
| 2 | திரு.P.A.செல்லப்பன், ஒப்பந்ததாரர் | 2,70,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.79 % அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.18%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**S.பாலசுப்ரமணியன்**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 855/2018/இ1)

13. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, பழைய பஸ்நிலையம் சாலை, மேல்நிலை நீர்தேக்க தொட்டி பின்புற சாலை ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **44** , நாள்: 28.02.2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 06.07.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 25,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 1.20 % குறைவு |
| 2 | M/s.R.N & Co. ஒப்பந்ததாரர் | 25,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 2.50% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **1.20%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**M.அப்புசாமி**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 855/2018/இ1)

14 .பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16, 17, 24 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்கள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் பழுதுபட்டுள்ள மோட்டாரை மாற்றி பொருத்துதல் பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்: **145**, நாள்: 28 .05 .2018ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 06.07.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். அதில் கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவுறுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.முருகேசன், ஒப்பந்ததாரர் | 2,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.73 % குறைவு |
| 2 | திரு.C.சின்னுசாமி, ஒப்பந்ததாரர் | 2,00,000 | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 1.25% அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.73%** சதவீதம் குறைவாக கொடுத்த திரு.**M.முருகேசன்**, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 938/2018/இ1)

15. பவானி நகராட்சி பகுதிகளில் காவேரி மற்றும் பவானி ஆற்று படுகையில் வெள்ளத்தால் பாதிப்படையும் நிலை உள்ளது. அவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள கால்வாய்கள், சாலைகள் ஆகியவற்றில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் சேர் சகதிகளை உடனுக்குடன் அகற்றி சீர் செய்ய வேண்டி உள்ளது. மழை,புயல், வெள்ளத்தினால் ஏற்படும் பேரிடர்களை தடுக்க வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவதன் பொருட்டு JCB இயந்திரம் மூலம் அகற்ற வேண்டியுள்ளது. அவ்வாறு JCB இயந்திரம் மூலம் பணிகள் மேற்கொள்ள ரூ.50,000/- செலவினத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது நிதியில் இருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

16. பவானி நகராட்சிப்பகுதியிலுள்ள இரண்டு அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் ஐந்து நகராட்சி துவக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளின் பராமரிப்பு மற்றும் வளாகத் துப்புரவு பணிகளை வெளிக் கொணர்வு முறையில் ( Out sourcing Basis) M/s MSP Pest control Services Gobichettipalayam நிறுவனத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.516/- என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பள்ள வேலை நாட்களில் தினமும் 15 துப்புரவு பணியாளர்களை வழங்கிட பணி உத்திவு வழங்கப்பட்டு தூய்மை செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் ஒப்பந்தக்காலம் எதிர்வரும் 16.7.18 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் இப்பணிக்கு 2018-19 ஆம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 29.06.2018-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளியாளர்களின் விலை விகித உறை ( Financial Bid) திறக்கப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திற்கு மன்ற ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. இந்நிலையில் மேற்படி பணியானது பொது சுகாதாரப்பணி என்பதாலும் பள்ளி மாணவ மாணவியர்கள் பயிலும் கல்வி நிறுவனங்களின் சுகாதாரம் சம்பந்தமான பணி என்பதாலும் மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது என்பதால் 17.07.18-ம் தேதி முதல் 15.08.2018-ம் தேதி வரை M/s MSP Pest Control Services Gobichettipalayam அவர்களுக்கு ஒப்பந்தக்காலத்தை நீட்டிப்பு செய்து கொள்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.2.09 க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1878/2016/எச்1)

17. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.62241/96/F3 ,நாள்:25.3.97-ன்படி இந்நகராட்சிக்கு ஒரு லாரி ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.எண்.51799/07/J3, நாள்:5.10.2007-ன்படி 1.10.2005 முதல் 30.9.2007 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2007 முதல் 30.09.2008 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடத்தினை 1.10.2008 முதல் 30.9.2017 வரை நீடித்து வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பும், 1.10.2017 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ளவும் அனுமதி கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2142/99/சி1, நாள்:

10.08.2017-ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மற்றும் துாய்மை இந்தியா திட்டப்பணிகள் ஆகியவற்றை செயல்படுத்த லாரி ஓட்டுநர் பணியிடம்அவசியம் என்பதால் இப்பணியிடத்தினை 1.10.2008 முதல் 30.9.2018 வரை நீட்டித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம் (ந.க.எண்.2142/99/சி1)

18. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.53345/98/J3, நாள்:26.10.98--ன்படி இந்நகராட்சிக்கு மினிலாரி ஓட்டுநர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.எண்.8269/2010/ஜே3, நாள்:22.11.2010-ல் 1.10.2008 முதல் 30.9.2009 வரை வைத்து கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2009 முதல் 30.9.2010 முதல் நீடித்து வைத்து கொண்டமைக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடத்தினை 1.10.2010 முதல் 30.9.2017 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2982/2017/சி1, நாள்:19.06.2017-ன்படி கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மற்றும் துாய்மை இந்தியா திட்டப்பணிகள் ஆகியவற்றை செயல்படுத்த ஒரு மினி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் என்பதால் இப்பணியிடத்தினை 01.10.2010 முதல் 30.9.2018 வரை நீட்டித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் அனுமதி ரோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண். 2982/2017/சி1)

19.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.75767/97/இ1, நாள்:27.3.98-ன்படி ஒரு ஈப்பு ஓட்டுநர் பணியிடம் தற்காலிகமாக தோற்றுவித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பணி நீடிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது.

மேற்படி பணியிடத்தினை 01.10.2005 முதல் 30.9.2012 வரை நீட்டிப்பு செய்து கொண்டதற்கு பின்னேற்பும் 1.10.2012 முதல் 30.9.2013 வரை ஓராண்டு நீட்டித்து வைத்துக் கொள்வதற்கு அனுமதியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2012/எப்3, நாள்.26.12.2012-ன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி பணியிடம் மிகவும் அவசியம் என்பதால் 01.10.2013 முதல் 30.9.2017 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2017 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். 1138/98/சி1, நாள்: 24.06.2017-ன்படி கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சியில் அன்றாடம் நடைபெறும் திட்டப்பணிகள், பொது சுகாதாரப்பணிகள் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆய்வு மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், ஆகியோரின் ஆய்வுக கூட்டங்களில் கலந்து கொள்ளவும் இரண்டு ஈப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் இப்பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம். ( ந.க.எண். 1138/98/சி1)

20. நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.1073, நாள்: 23.9.1986-ன்படி இந்நகராட்சிக்கு தொழில்நுட்பம் இல்லாதகீழ்க்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

1) குடிநீர் படுகை தொட்டி துலக்குநர் - 1
2) நீரேற்று நிலைய துலக்குநர் - 1
3) நீர் தேக்க தொட்டி ( Reservoir Cleaner)

மேற்படி பணியிடங்கள் யாவும் குடிநீர் பிரிவுக்கு அவசியம் தேவை என்பதால் கடந்த 20 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2011/எப்3. நாள்.23.01.2013ல் 1.10.2005 முதல் 30.9.2012 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2012 முதல் 30.09.2013 வரை கால நீடித்து வைத்துக் கொண்டமைக்கு அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பணியிடங்கள் கடந்த 20 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2186/2001/சி1, நாள்: 24.06.2016-ன் படி 01.10.2013 முதல் 30.9.2016 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், மற்றும் 1.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள

அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட தொழில் நுட்பம் அல்லாத பணியிடங்களை குடிநீர் அவசியம் கருதி 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2018 முதல் நிரந்தரமாக நீடித்துக் கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2183/2001/சி1)

21. அரசாணை எண்.1073, நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள்:23.9.1986-ன் படி இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1) இளநிலைப் பொறியாளர் நிலை - 2 | - | 1 |
| 2) மின்பணியாளர் நிலை - 2 | - | 3 |
| 3 குடிநீர் படுகை தொட்டி இயக்குநர் நிலை - 1 | - | 2 |
| 4) தலைமை நீரேற்று நிலைய குழாய் பொருத்துநர் நிலை - 2 | - | 1 |
| 5) குழாய் ஆய்வாளர் | - | 1 |

மேற்கண்ட பணியிடங்கள் பவானி நகராட்சி பொறியில் பிரிவிற்கு அவசியம் தேவையென்பதால், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை மூமு.எண்.55526/2011/எப34/ நாள்:23.01.2013-ல் 1.10.2004 முதல் 30.9.2012வரை நீட்டிப்பு செய்து கொண்டமைக்கு பின்னேற்றும் மற்றும் 1.10.2012 முதல் 30.9.2013 வரை ஓராண்டு நீட்டித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கடிதம். ந.க.எண்.2185/2001/சி1, நாள்:24.06.2016-ல் 1.10.2013 முதல் 30.9.2016 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட பணியிடங்கள் குடிநீர் சம்மந்தப்பட்ட பணியிடங்களாகவும் தொழில்நுட்ப பணியிடங்களாகவும் உள்ளதால் 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2185/2001/சி1)

22. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.631, நாள்: 24.4.1984-ன் படி இந்நகராட்சிக்கு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.எண்.37748/2014/டிபி1. நாள்17.12.2014-ல் இப்பணியிடத்தினை 01.10.2010 முதல் 30.09.2014 வரை நீடித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2014 முதல் 30.09.2016 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2182/2001/சி1, நாள்: 13.06.2016-ல் நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தினை 01.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பவானி நகராட்சிக்கு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் அவசியம் என்பதால் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தினை 01.10.2016 முதல் 30.09.2018 வரை நீடித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2182/2001/சி1)

23. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை) எண்.1192 நாள்:7.8.1980-ல் இந்நகராட்சிக்கு நகராட்சி பொறியாளர் நிலை-3, பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.21.03.2013-ல் 1.10.2004 முதல் 30.9.2012 வரை நீட்டித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2012 முதல் 30.3.2013 வரை ஓராண்டு நீட்டிப்பு வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடத்தினை 1.10.2013 முதல் 30.9.2016 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் மற்றும் 1.10.2016 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2186/2001/சி1, நாள்: 24.06.2016-ன்படி கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள், அடிப்படை வசதிப்பணிகள் மற்றும் குடிநீர் விநியோகப்பணிகளை செயல்படுத்த நகராட்சி பொறியாளர்நிலை-3 பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2018 வரை நீடித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2186/2001/சி1)

24. ஊரக வளர்ச்சி (மற்றும்) உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை) எண்.939, நாள்:13.6.1980-ன்படி இந்நகராட்சிக்கு பொதுப்பிரிவிற்கு மேலாளர் பணியிடம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 25679/2016/எச்1, நாள்:28.11.2016 -ன்படி மேலாளர் பணியிடத்தினை 01.10.2011 முதல் 30.9.2016 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2982/1997/சி1, நாள்:14.06.2016ன்படி 01.10.2016 முதல் 30.9.2017 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2017 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலாளர் பணியிடம் அலுவலக நிர்வாகத்திற்கு அவசியம் என்பதால் 1.10.2016 முதல் 30.9.2018 வரை வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2982/97/சி1)

25. ஊரக வளர்ச்சி (மற்றும்) உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை) எண்.939, நாள்:13.6.1980-ன்படி இந்நகராட்சிக்கு பொதுப்பிரிவிற்கு தட்டச்சர் பணியிடம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 25679/2016/எச்1, நாள்:28.11.2016 -ன்படி தட்டச்சர் பணியிடத்தினை 01.10.2011 முதல் 30.9.2016 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2184/1999/சி1, நாள்:13.06.2017-ன்படி 01.10.2016 முதல் 30.9.2017 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2017 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தட்டச்சர் பணியிடம் அலுவலக நிர்வாகத்திற்கு அவசியம் என்பதால் 1.10.2016 முதல் 30.9.2018 வரை வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2184/99/சி1)

26. நகராட்சி நிர்வாக (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.268, நாள்:5.5.1989-ன்படி இந்நகராட்சிக்கு ஒரு லாரி ஓட்டுநர் மற்றும் ஒரு துலக்குநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.எண்.8269/2010/ஜே3, நாள்:22.11.2010-ன் படி மேற்படி பணியிடங்களை 1.10.2008 முதல் 30.9.2009 வரைநீடித்துக்கொண்டமைக்கு பின்னேற்பு மற்றும் 1.10.2009 முதல் 30.9.2010 வரை நீட்டித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியிடங்கள் கடந்த 20 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டுள்ளது. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2143/1999/சி1, நாள்:19.06.2017-ன்படி, 1.10.2010 முதல் 30.9.2017 வரை நீட்டித்து கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2017 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதியும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மற்றும் தூய்மை இந்தியா திட்டப்பணிகள் ஆகியவற்றை செயல்படுத்த ஒரு லாரி ஓட்டுநர் மற்றும் ஒரு துலக்குநர் பணியிடங்கள் அவசியம் என்பதால் இப்பணியிடங்களை 01.10.2010 முதல் 30.9.2018 வரை நீட்டித்து கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (ந.க.எண்.2143/99/சி1)

27. பவானி நகராட்சியில் ஸ்ரீ சரவணா இன்ஜினியரிங் பவானி (பி) லிமிடெட் 2015-ம் ஆண்டுகளில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ASD 5% ரூ. |
|---|---|---|---|
| 1 | "அம்மா உணவக கட்டிடம் | ரூ.25.00 | ரூ.1,25,000/- |
| 2 | "அம்மா உணவகம் சமையல் அறை உபகரணங்கள் | ரூ.12.00 | ரூ. 55,000/- |
| 3 | "அம்மா உணவகம் முகப்பு பகுதி அபிவிருத்தி | ரூ. 4.00 | ரூ. 20.000/- |

மேற்கண்ட பணிகள் முடிவுற்று இறுதி பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டுவிட்டது. பட்டியல் தொகை வழங்கப்படும் போது பிடித்தம் செய்யப்பட்ட 5% ( ASD) கூடுதல் காப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது எனவே மேற்கண்ட 3 பணிகளுக்காக பிடித்தம் செய்த 5% ASD தொகையை காலம் கடந்த வைப்பு தொகை கணக்கிலிருந்து விடுவித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ( 780/2018/இ1)

28. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வினியோகம் செய்யும் பொருட்டு DMA District meteral Area முறையில் தனித்தனி zone களாக பிரித்து குடிநீர் விநியோகம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார். எனவே அதன்படி தனித்தனி zoneகளாக பிரித்து குடிநீர் விநியோகம் செய்ய அனைத்து பகுதிகளையும் control level survey செய்ய வேண்டியுள்ளது. இதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 135000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

29. தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 11, நாள்: 12.01.1992 ஆம் ஆண்டு தொழில்வரி விதித்தல் மற்றும் வசூல் சட்டத்தை திருத்தம் செய்து புதியதாக தொழில்வரி விதிப்பது மற்றும் வசூல் செய்வது தொடர்பாக 1920-ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 124, 124டி, 124இ, 124எப், 124ஜி, 124ஜே மற்றும் 124கே ஆகிய பிரிவுகளை ஏற்படுத்தி புதியதாக தொழில்வரி விதிகள் 1999 என வெளியிட்டு தமிழ்நாடு அரசிதழ் பிரத்யோகம் 753, நாள்: 28.12.1998-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12503/2018/ஆர்1, நாள்: 21.05.2018-ன்படி பவானி நகராட்சியில் நகர்மன்ற தீர்மான எண். 112. நாள்: 25.05.2018 அனுமதி பெறப்பட்டு 01.06.2018 அன்று பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. 30 நாட்கள் முடிவுற்ற நிலையில் பொதுமக்களிடமிருந்து தொழில்வரி 25% உயர்வு செய்தது தொடர்பாக ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை. எனவே கீழ்கண்ட விபரப்படி 01.10.2018 முதல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்டுள்ளதனை நடைமுறைபடுத்த உறுதி செய்து அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | அரையாண்டு வருமானம் | ஏற்கனவே உள்ள தொழில்வரி அரையாண்டு | 01.10.2018 முதல் உயர்த்தப்பட்ட அரையாண்டு தொழில் வரி |
|---|---|---|---|
| 1 | ரூ.21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21001 முதல் 30000 வரை | ரூ.125 | ரூ.160 |
| 3 | ரூ.30001முதல் 45000 வரை | ரூ.310 | ரூ.390 |
| 4 | ரூ.4500 முதல் 60000 வரை | ரூ.615 | ரூ.770 |
| 5 | ரூ.60001 முதல் 75000 வரை | ரூ.915 | ரூ.1145 |
| 6 | ரூ.75001 முதல் அதற்கு மேல் | ரூ.1220 | ரூ.1250 |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.860/2018/அ1)

30. பவானி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2017-18 - ன் கீழ் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம், ஈரோடு அவர்களின் நடவடிக்கைகள் கடித ந.க.எண். 645/2017/அ5, நாள்:04.10.2017 நிர்வாக அனுமதி மற்றும் மண்டல செயற்பொறியாளர் திருப்பூர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண். 11/REE/2017-18 நாள்: 06.11.2017 பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீமுனியப்பன் கன்ஸ்ட்ரக்சன் பவானி அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண். 728, நாள்: 29.12.2017-ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தார் சாலை பணி மேற்கொள்ளும் போது பொது மக்களின் வசதிக்காக கூடுதலாக நீளம் மற்றும் அகலம் அதிகம் செய்ய வேண்டியிருந்ததால் கீழ்கண்ட மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதல் அளவு மதிப்பீட்டு தொகைக்குள் செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக செய்தது.</u>

| வ. எண். | மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்ட இனம் | மதிப்பீட்டின்படி உள்ள அளவு ( Qty) | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு ( Qty) | செய்யப்பட்ட வேலையின் மொத்த அளவு ( Qty) |
|---|---|---|---|---|
| 1 | Wet mix macadam ( WMM) | 470$m^3$ | 36.22$m^3$ | 506.22 $m^3$ |
| 2 | Prime coat 7kg /10 $m^2$ | 3132 $m^2$ | 243.14 $m^2$ | 3375.14 $m^2$ |
| 3 | Tack coat 2.5 kg /10 $m^2$ | 3132 $m^2$ | 243.14 $m^2$ | 3375.14 $m^2$ |
| 4 | Tack coat 2 kg /10 $m^2$ | 1510 $m^2$ | 915.48 $m^2$ | 2425.48 $m^2$ |
| 5 | Bituminous concrete 30mm thick ( BC) | 140 $m^3$ | 34.44 $m^3$ | 174.44 $m^3$ |

மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட பணி முடிவு அறிக்கை மண்டல செயற் பொறியாளர் திருப்பூர் அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1098/2017/இ1)

31. பவானி நகராட்சி 25% சதவீதம் தொழில்வரி உயர்வு செய்து பொதுமக்கள் அறியும் வகையில் தினதந்தி நாளிதழில் 01.06.2018 அன்று பிரசுரம் செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள தொழில் வரியில் 25% வரி உயர்வு செய்தது தொடர்பாக. பொதுமக்களிடம் ஆட்சேபனை கடிதம் ஏதும் பெறப்படவில்லை. எனவே 25% சதவீதம் தொழில்வரி உயர்வு செய்ததை உறுதி செய்தி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டி தொகை ரூ. 4200/- ஐ அரசு தலைப்பில் செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எ.ண். 860/2018/அ1)

32. பவானி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் புதியதாக 15 வாட்ஸ் எல்.இ.டி தெருவிளக்குகள் அமைக்கவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. வார்டுஎண். 2 காமராஜ் நகர் முதல் வீதி ( கவுண்டர் நகரில் உள்ள பிரிவு சாலை) -ல் 2 விளக்குகள்
2. வார்டு எண். 4 மெயின் ரோடு ( சின்னப்ப லே அவுட்டிலிருந்து பஸ்நிலையம் செல்லும் சாலை) பகுதியில் -1 விளக்கு
3. வார்டு எண். 8 அந்தியூர் ரோடு காவல் துறை அலுவலர் குடியிருப்பு முன்புற பகுதி மற்றும் பின் புற பகுதிகளில் -5 எண்ணிக்கை

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.1111/2018/இ1)

(ஒம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி

**வருகின்ற 2018-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. 1920 - ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 132(A), 306, 307,308,309, 310 ன்படி பவானி நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான வைப்புத் தொகை, இதரக்கட்டணம், புதிய குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்தல், அபராத கட்டணம் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்பு கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு புதியதாக குடிநீர் விநியோக துணை விதிகள் ( Bye Laws) இயற்றப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி உருவாக்கம் செய்யப்பட்ட புதிய குடிநீர் விநியோக உபவிதிகள் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.825/2018/இ1)

2. பவானி நகராட்சியில் கடந்த 1.1.2014முதல் குடிநீர் கட்டணம் உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள்,மின் கட்டணம்,தலைமை நீரேற்று நிலைய ஜெனரேட்டர் எரிபொருள் மற்றும் பராமரிப்பு கட்டணம் அதிக அளவில் செலவு ஆவதால் செலவினங்களை கருத்தில் கொண்டு 1.10.2018 முதல் கீழ்கண்டவாறு வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**குடிநீர் இணைப்புவைப்புத் தொகை**

| வ. எண். | உபயோகம் | தற்போது உள்ள குடிநீர் வைப்புத் தொகைரூ. | 01.10.2018 முதல் உயர்வு செய்யப்படஉள்ள குடிநீர் வைப்புத் தொகைரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 2000.00 | 3000.00 |
| 2 | வீட்டு பயன்பாடுஅல்லாதவை (வணிகஉபயோகம்) | 5000.00 | 6000.00 |
| 3 | வீட்டு பயன்பாடுஅல்லாதவை ( தொழிற்சாலைஉபயோகம்) | 5000.00 | 6000.00 |

**குடிநீர் கட்டணம்**

| வ. எண். | உபயோகம் | மாதம் ஒன்றுக்கு தற்போது உள்ள குடிநீர் கட்டணம் | 1.10.2018 முதல் உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம்Rs.100<br><br>2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர்களும் மற்றும் அதன் பாகத்திற்குRs.15/- | 1.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் Rs.150/-<br><br>2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்குRs.20/- |
| 2 | வீட்டுஉபயோகம் அல்லாதது தொழிற்சாலை மற்றும் வணிக உபயோகம் | 1.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம்Rs.450/-<br>2.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு Rs.45/- | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் Rs.500/-<br>2.மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்குமேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு Rs. 50/- |

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.825/2018/இ1)

3. பவானி நகராட்சி குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் குறிப்பிட்ட காலங்களுக்குள் சரிவர வசூலாகாமல் காலதாமதமாகவே வசூல் ஆகின்றது. குறிப்பிட்ட காலாண்டு காலங்களுக்குள் சரிவர குடிநீர் கட்டணம் வசூல் ஆகாததால் குடிநீர் சம்பந்தப்பட்ட அத்தியசிய பணிகள் மேற்கொள்ள முடிவதில்லை. எனவே 1920-ம்வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 306 மற்றும் 313-ன் கீழ் குடிநீர் கட்டண துணைவிதிகளின்படி குடிநீர் கட்டணம் வருடத்திற்கு நான்கு காலாண்டுகள் (முதல் காலாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை, இரண்டாம் காலாண்டு ஏப்ரல் முதல் ஜீன் வரை,மூன்றாம் காலாண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரை மற்றும் நான்காம் காலாண்டு அக்டோபர் முதல் டிசம்பர் வரையும்) உள்ள தொகையினை ஒவ்வொரு காலாண்டு முடிந்தவுடன் அடுத்து வரும் 15 நாட்களுக்குள் செலுத்தவும்,செலுத்த தவறும் பட்சத்தில் 16-ம் தேதி முதல் 30-ம் தேதிவரை செலுத்தினால் ரூ.50/- அபராதக் கட்டணமும், 30 நாட்களுக்குமேல் செலுத்த தவறினால் இணைப்பு துண்டிப்பு கட்டணம் ரூ.500/-ம் வசூல் செய்ய குடிநீர் விநியோக உபவிதிகளில் வழிவகை செய்து கட்டணத்துடன் அபராத கட்டணமும் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.825/2018/இ1)

4. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளதற்கிணங்க நகராட்சிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழக்கப்படுவதில் ( Urban Tree Software) மென்பொருள் செயலாக்கம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது அதன் அடிப்படையில் பவானி நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்பந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து 1 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாகவும், நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணையவழி மென்பொருளில் ( Urban Tree Software) -ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் உரிய விதிகளைப் பின்பற்றி குடிநீர் விநியோக உபவிதிகளில் திருத்தம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.1137 / 2018/இ1)

5. பவானி நகராட்சி தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் எண். TN. 36,AY - 6793 -ல் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் வாகனத்தை சரிவர இயக்க முடியவில்லை. வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ. 70,000/- ஆகும். எனவே மேற்படி உத்தேச செலவினத்திற்கும், வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் பழுதுகள் சரி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ( ந.க.எண்.954 / 2017/இ1)

6. இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண். TN.36, AY. 6791-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.20,000/- ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கும் வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்று நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ( ந.க.எண்.950 / 2017/இ1)

7. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் Tn36AY0873 வாகனத்தின் கிளட்ச்பிளேட் சரியாக இயங்காததால் கிளட்ச் கிட் இரண்டு புதியதாக மாற்றி பகுதியினை சரி செய்ய வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்தின் (SML Company) அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மையமான M/s KRISTAL Motors (P) Ltd பவானி பைபாஸ் ரோடு பவானி அவர்களிடம் மதிப்பீடு பெறப்பட்டதில் பழுதான பாகங்களை மாற்றுவதற்கு ரூ.3722/- ஆகும் என விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணி மனையில் பழுதுகளை செப்பனிட்டு கொள்வதற்கும் அதற்கான செலவினம் ரூ. 3722/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ( ந.க.எண்.1235/ 2018/எச்1)

8. பவானி நகராட்சி பகுதியில் உள்ள அரசு/நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு 15 துப்புரவு பணியாளர்களை வழங்கும் பணியினை மேற்கொள்ள 27.06.2018 ஆம் தேதியன்று ஒப்புந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1) Trustus Outsourcing Solutions Pvt Ltd,
Plot No: 117,
28th Street, Balaji Nagar,
Chennai-91.

2) Relyon Facility Services Pvt Ltd,
Plot No. 142, 5th Cross Street,
Sri Sai Nagar,
Okkiam Thoraipakkam,
Chennai-97.

கலந்து கொண்ட மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகளை நிறைவு செய்துள்ளதன் பொருட்டு மேற்படி இரு நிறுவனங்களின்

விலைவிகிதப்புள்ளி (Financial Bid) 29.06.2018ஆம் தேதியன்று திறக்கப்பட்டதில் இருநிறுவனங்களும் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் பின்வருமாறு:

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம்** |
|---|---|---|
| 1 | Trust us Outsourcing Solutions Pvt Ltd,<br>Plot No: 117,<br>28th Street, Balaji Nagar,<br>Chennai-91. | ரூ.568/- (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு) மற்றும் ரூ.102/- (வரி இனங்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு). |
| 2 | Relyon Facility Services Pvt Ltd,<br>Plot No. 142, 5th Cross Street,<br>Sri Sai Nagar,<br>Okkiam Thoraipakkam,<br>Chennai-97. | ரூ.565/- (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு) மற்றும் ரூ.102/- (வரி இனங்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு). |

இந்நிலையில் வரிசை எண்: 2ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைவான விலைவிகிதம் வழங்கிய நிறுவனமான M/s Relyon Facility Services Pvt Ltd, Chennai-97 அவர்களிடம் Negotiation கோரப்பட்டதில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.565/- என்னும் விலைவிகிதத்தில் மேற்படி பணிக்கு பணியாளர்களை வழங்க 09.07.2018 ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே, திருவாளர். Relyon Facility Services Pvt Ltd, Chennai-97 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலககுறிப்பு:**

1) பொது சுகாதாரப்பணியின் அவசியம் கருதி M/s Relyon Facility Services Pvt Ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
2) E.P.F, E.SI, Insurance, Service Tax மற்றும் அரசு மூலம் ஒப்பந்தப்பணியாளர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படும் சட்டரீதியான செலவினங்கள் ஒப்பந்ததாரர் மூலம் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுக்கு செலுத்திடும் வகையில் மதிப்பீட்டுதொகை கணக்கிடப்பட்டு உள்ளதையும் அவ்வப்போது அரசு நடைமுறைப்படுத்திடும் விகிதத்தொகை மாறுபடின் மாறுபடக்கூடிய தொகையின் அடிப்படையில் செலவினத்தை கணக்கிட்டு கூடுதலாக செலவு ஏற்படின் அதற்கான தொகையை செலுத்தவும்.
3) ஒரு வருட ஒப்பந்தகாலம் முடிவடைந்தபின் தேவைக்கேற்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஒப்பந்தகாலத்தை புரிந்துணர்வு ஒப்பந்தம் வாயிலாக தேவைப்படும் காலத்திற்கு நீட்டித்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

9. பவானி நகராட்சி வார்டு எண். 7,8 sintex tank இரண்டு இடங்களில் வைக்க குட்டு மற்றும் வர்ணம் பூசுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.50000/- நகர்மன்ற தீர்மான எண். 734

நாள்: 29.12.2017 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி | 50000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு 0.09% |
| 2 | m/s R.N.&Co | 50,000/- | சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் 0.41% |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.09% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

10. பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யக்கூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40HP மின் மோட்டார்கள் (எண்.2) பம்பில் பழுது ஏற்பட்டுள்ளது. மற்றும் அதன் ஸ்டார்டர்லில் பழுது ஏற்பட்டுள்ளதனதால் இதனை பழுது பார்க்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.50000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

11. பவானி நகராட்சி பகுதிகளில் காவேரி மற்றும் பவானி ஆற்று படுகையில் வெள்ளத்தால் பாதிப்படையும் பகுதிகளில் JCB இயந்திரம் மூலம் சீரமைப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.50000/- நகர்மன்ற தீர்மான எண். நாள்: . .2018 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 24.07.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளியின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | விலைப்புள்ளி அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி | 50,000/- | ஒரு மணி வாடகை 845/- |
| 2 | திரு. எம்.எஸ். குருசாமி | 50,000/- | ஒரு மணி வாடகை 870/- |
| 3 | திரு. எஸ். பாலசுப்பிரமணியன் | 50,000/- | ஒரு மணி வாடகை 910/- |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளித் தொகை 845/- விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

12. பவானி நகராட்சிக்கு சொந்தான வார்டு எண். 24 மீன் மார்க்கெட்டில் கேட் வசதி இல்லாத காரணத்தினால் சட்ட விரோதமான நிகழ்ச்சி நடக்க வாய்ப்புள்ளதால் இருபுறங்களிலும் கேட் அமைக்கவும் தண்ணீர் வசதி செய்யவும் தண்ணீர் தொட்டி கட்டி கொடுக்கவும் ரூ. 1,50,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 01139/2018/ இ1)

13. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினமும் சேகரிக்கப்படும் குப்பைகளை ( ஒருபகுதி) Onsite Composting மூலம் குப்பைகளை உரமாக்க வார்டு எண். 2 காமராஜ் நகர் பள்ளி பின்புறம், வ. எண். 11 மயானம் அருகில் , தேவபுரம் பூங்கா வார்டு எண். 24 பழைய பேருந்து நிலையம் பகுதி மற்றும் வார்டு எண். 20, அனுசுயா பிரசவ விடுதி பின்புறம் மற்றும் வ.எண்.4 புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகில் ஆகிய இடங்களில் Onsite Composting அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது நிதி 2018-19 ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ஓம்) திரு.க.கதிர்வேல்
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பவானி நகராட்சி